**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்**.224/2022

பெயர்-திரு.நம்பியான் நாள்.12.09.2025

வா.சா.3 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.3 : 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) வாதி எனது மகன் ஆவார். நானும், எனது மகனும் தனித்தனியாக குடியிருக்கிறோம். வாதி சாட்சியம் அளித்தபோது நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை. வாதி என்ன சாட்சியம் அளித்தார் என்ற விவரத்தை என்னிடம் சொன்னார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்கள் எனது மகன்சொல்லிதான் தயார் செய்தேன். பட்டா எண்.3733 -க்கு சம்மந்தப்பட்ட சர்வே எண்கள் தெரியுமா என்றால், தெரியும் 1702 மற்றும் 1704 ஆகும். 1704 -ன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 80 செண்ட் என்றால், சரிதான். எனது தகப்பனாரின் பெயர் வெள்ளையண்ண கவுண்டர் என்றால் சரிதான். எனது தகப்பனாருடன் கூட பிறந்தவர்கள் நம்பியாகவுண்டர், மலையாகவுண்டர் என்றால், நம்பியாகவுண்டர் மட்டும்தான், மலையாக்கவுண்டர் எனது தந்தையுடன் உடன் பிறந்த சகோதரர் அல்ல.

2) எனது மகன் வாதி தேவராஜ் சாட்சியம் அளிக்கும்போது, எனது தாத்தா நம்பியாகவுண்டரின் மகன்கள் மூவர் என்றும், 1) நம்பியாக்கவுண்டர், 2) வெள்ளையணகவுண்டர், 3) மலையாகவுண்டர் என சொல்லியிருந்தால், அது தவறானது. இரண்டு பேர்தான். மேற்படி மலையாகவுண்டரின் அப்பா பெயரும், நம்பியாக்கவுண்டர்தான். ஆனால், எனது தாத்தா நம்பியாகவுண்டரும், மலையாக்கவுண்டரின் தந்தை நம்பியாகவுண்டரும் வேறுவேறு ஆகும். எனது தாத்தா நம்பியாகவுண்டருக்கு குத்தியாலத்தூர் கிராமத்தில் எந்தெந்த சர்வே எண்ணில் சொத்து உள்ளது என்றால், சர்வே எண்.1702 மற்றும் 1704. அவருக்கு வேறு பூமிகள் இல்லை. சர்வே எண்.1561-ல் எங்களுக்கு சொத்து உள்ளதாக எனது மகன் சாட்சியம் அளித்திருந்தால், அது தவறானது. எனது தகப்பனார் வெள்யைணகவுண்டர் மற்றும் எனது சித்தப்பா நம்பியாகவுண்டரும் சேர்ந்து, கடந்த 28.04.1975 ல் தாவா சொத்தில் பு.ஏ.2 ஏக்கர் பூமியை மலையாக்கவுண்டருக்கு கிரையம் கொடுத்துள்ளார்களா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

3) 1975-ல் கிரையம் கொடுத்த பத்திரத்தில் சர்வே எண்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்லி, பிரதிவாதிகளும் உடன்பிறந்த சகோதரி தங்கமணி, சகோதரர் துரைசாமி ஆகியோர் எங்களுக்கு எதிராக சத்தியமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.87/2022 என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரிதான். அதில் நாங்கள் ஆஜராகி நடத்தி வருகிறோம் என்றால், சரிதான். மேற்படி வழக்கில் ஆஜரான பிறகு, 1975-ல் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்ற விவரத்தை தெரிந்துகொண்டேன். ப.க.ச.எண்.330, அதன் பு.க.ச.எண்.1704 என்றால், சரிதான். பு.ஏ.2.80 செண்ட்டிற்கு செக்குபந்தி விவரம் தெரியுமா என்றால், தெரியும். வடக்கும், தெற்கும் வாரி புறம்போக்கு உள்ளது, கிழக்கு பள்ளம் உள்ளது. மேற்கு அரசு புறம்போக்கு உள்ளது. மேற்படி சொத்திற்கு நடுவே மாக்கம்பாளையம் ரோடு உள்ளது.

4) எனது மகன் வழக்கு தாக்கல் சமயத்திலும், செட்டில்மெண்ட் ஏற்படுத்திக் கொடுத்த சமயத்திலும், கிழக்கே சடையப்பன் பூமியும், மேற்கே கடம்பூரில் இருந்து மாக்கம்பாளையம் போகும் ரோடு என குறிப்பிட்டிருந்தால், அது தவறானதாகும். நாங்கள் மேற்படி செக்குபந்தி விவரங்களை திருத்தம் செய்ய பிழைதிருத்தல் ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. மேற்படி, க.ச.எண.1704-ல் உள்ள சொத்திற்கான செக்குபந்தி ஆவணத்திலும், செட்டில்மெண்ட் ஆவணத்திலும் சரியாக இருப்பதால்தான் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரியல்ல. மேற்படி செக்குபந்திக்குள் கண்ட சொத்தைதான் 1975-ல் மலையாக்கவுண்டருக்கு எனது தகப்பனார் மற்றும் எனது சித்தப்பாவும் சேர்ந்து எழுதிக் கொடுத்துள்ளார் என்ற விவரத்தை தெரிந்துகொண்டேன் என்றல், சரிதான். க.க.ச.எண்.1704 சொத்தை நாங்களும், பிரதிவாதிகளும் சேர்ந்து ஓட்டிக் கொண்டிருக்கிறோம். நாங்களும், பிரதிவாதிகளும்ட பாதி பாதியாக விவாசயம் செய்து வருகிறோம்.

5) பிரதிவாதிகளை மேற்படி சொத்திலிருந்து காலிசெய்யுமாறு, இடைஞ்சல் செய்து, பிரச்சனை ஏற்பட்டதால்தான் தாவா சொத்தை எனது மகன் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால், சரிதான். கடந்த 28.03.2022 தேதிய க.ச.எண்.1704- ஐ பொறுத்து எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுக்க உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்றால், சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தில் 2 ஏக்கர் 80 செண்ட்டில் நான் சுவாதீனம் இருப்பதாக

எழுதிக் கொடுத்திருந்தால், அது தவறானதாகும். க.ச.எண்.1704-ல் பொறுத்து எவ்வித உரிமையும் இல்லாமல், நான் எனது மகன் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது தூண்டுதலின் பெயரில் எனது மகன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. சத்தியமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்கிற்கு எனது மகன்தான் வழக்கறிஞர் ஏற்பாடு செய்து கொடுத்தார் என்றால், சரியல்ல. எனக்கு உரிமை இல்லாத சொத்தைப் பொறுத்து எனது மகனுக்கு ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டு, அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 28.04.1975-ல் மலையாக்கவுண்டர் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் சர்வே எண்ணில் ஏற்பட்ட பிழையை சாதகமாக கொண்டு, செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி உரிமை கொண்டாடுகிறோம் என்றால், சரியல்ல.

6) ஏற்கனவே பிரதிவாதிகள் தாவா சொத்தில் சரிபாதி விவசாயம் செய்து வருவதாக நான் சாட்சியம் அளித்துள்ள நிலையில், கடந்த 25.10.2022-ல் பிரதிவாதிகள் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து இடைஞ்சல் செய்ததாக கூறியுள்ளது தவறு என்றால், சரிதான். நான் எனது மகனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.09.12 18:12:38 +0530

District Munsif